**முதன்மை சார்பு நீதிமன்றம், கரூர்.**

முன்னிலை–திருமதி.கே.எல். பிரியங்கா, பி.ஏ.பி.எல்.,(Hons)

முதன்மை சார்பு நீதிபதி, கரூர்.

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண். 747/2022**

**(CNR.NO.TNKR03-001408-2022)**

திரு. A. செந்தில்குமார், த/பெ. ஆறுமுகம், வயது 47, புதிய கதவு எண். 181, பழைய கதவு எண். 123 டி, பால்வார்பட்டி, புன்செய் கடம்பங்குறிச்சி கிராமம், மண்மங்கலம் தாலுக்கா, கரூர் மாவட்டம். ....வாதி

//எதிர்//

1. திரு. தங்கமுத்து, த/பெ. லேட்.பெருமாள், வயது 57, கதவு நெ. 4/169 பண்டுதகாரன்புதூர், மண்மங்கலம் அஞ்சல், புன்செய் கடம்பங்குறிச்சி கிராமம், மண்மங்கலம் தாலுக்கா, கரூர் மாவட்டம்.

2. திருமதி. தெய்வானை, க/பெ. தங்கமுத்து, வயது 55, கதவு நெ.4/169, பண்டுதகாரன்புதூர், மண்மங்கலம் அஞ்சல், புன்செய்கடம்பங்குறிச்சி கிராமம், மண்மங்கலம் தாலுக்கா, கரூர் மாவட்டம்.

3. திரு. திருமூர்த்தி, த/பெ. அம்மையப்ப கவுண்டர், வயது 52, கதவு எண். 61, குன்னிகாட்டூர், கிழக்கு தவிட்டுபாளையம் அஞ்சல், புன்செய் தோட்டக்குறிச்சி கிராமம், மண்மங்கலம் தாலுக்கா, கரூர் மாவட்டம்.

.....பிரதிவாதிகள்

தாவா வாதிக்கு ஆதரவாகவும், பிரதிவாதிக்கு எதிராகவும் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரி, வாதிக்கு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வழக்கு தொகை ரூ.4,57,025 யும், மேலும் அசல் தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து தொகை முழுவதும் செல்லாகும் நாள் வரை மாதம் ஒன்றுக்கு ரூ.100 க்கு ரூ.2.10/- வீதம் வட்டி செலுத்த முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்திடவும், அவ்வாறு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வழக்கு தொகை செலுத்த தவறினால் வழக்குச்சொத்தினை பொது ஏலத்தில் விற்பனைக்கு கொண்டுவந்து அதன் மூலம் பொது ஏலத்திற்கு விடுவதற்கு இறுதி நிலை தீர்ப்பாணை நிறைவேற்றிடவும் தீர்ப்பாணை பிறப்பித்திடவும், மேலும் தாவா சொத்தினை பொறுத்து சொத்துரிமை மாற்றுச்சட்டம் பிரிவு 55 (1) (f) ன் கீழ்

பொருட்பிணை பொருட்பு பொறுத்து (Charge) பாத்தியத்துடன் 1 மற்றும் 2 பிரதிவாதிகள், வாதிக்கு செலுத்தும் வகையிலும் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கியும், தாவா சொத்துக்களை பொறுத்து 1 மற்றும் 2 பிரதிவாதிகளோ அவரது முகவர்களோ அல்லது சார்பற்றுனர்களோ எவ்விதமான சொத்து மாற்றாக்க ஆவணங்களும் ஏற்படுத்த கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும் வழக்கின் செலவு தொகைகளை 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வாதிக்கு வழங்க கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் செய்த நாட்கள் : 27.09.2022

தமிழ்நாடு வழக்கு மதிப்பீட்டுச் சட்டம் மற்றும் நீதிமன்ற முத்திரைக்கட்டணச்சட்டம் பிரிவு 33(1) மற்றும் 27 சி –ன் படி செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற கட்டணம் ரூ.14025.75+30=14055.75/– செலுத்தப்பட்டுள்ளது.

வழக்கிற்கான வியாஜ்ஜிய மூலம் 18.03.2019 ந் தேதியன்று புஞ்சை கடம்பங்குறிச்சி கிராமம் இந்நீதிமன்ற எல்லைக்குள் அமைந்துள்ளது.

## மதிப்பீடு விபரம்

| | |
|---|---|
| அ) ஈடுகடன் மேடோவர் அடமான பத்திரத்தின்படி வாதிக்கு, 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கொடுக்கவேண்டிய அசல் தொகை | ரூ. 2,50,000/- |
| அசல் ரூ.2,50,000 த்திற்கு ரூ.100 க்கு ரூ.2.10 வீதம் வட்டி 18.03.2019 முதல் 01.09.2022 வரை (3 வருடம் 5 மாதம் 13 நாட்கள்) | ரூ. 2,17,525/- |
| ஆக கூடுதல் | ரூ.4,67,525/- |

இந்த வழக்கு 31.07.2026 ம் தேதியன்று என் முன்பாக விசாரணைக்காக வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D. நாகராஜன்அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. சுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், 3 வது பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.

A.சுரேந்திரன் அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவாணை**

It is ordered that the suit is dismissed for default.

**சொத்து விபரம்**

கரூர் பதிவு மாவட்டம், வேலாயுதம் பாளையம் சார்பதிவகம், மண்மங்கலம் வட்டம், புஞ்சை கடம்பங்குறிச்சி பஞ்சாயத்துக்குச் சேர்ந்த புஞ்சை கடம்பங்குறிச்சி கிராமத்தில், அ.பு.ச. 127 நெ. ஏக். 4.25 இதில் சுப்பிரமணி மனை நிலத்துக்கு கிழக்கு, 15 அடி அகல கிழமேல் தடத்துக்கு தெற்கு, P.K. கருப்பண்ணன் மனை நிலத்துக்கு மேற்கு, துரைசாமி பூமிக்கு வடக்கு, இதன் மத்தியில் கிழமேல் ஜாதியடி வடபுரம் 30, தென்புரம் 29.1/2 தென்வடல் ஜாதியடி 74, இந்தளவுள்ள 2201.1/2 சதுரடியுள்ள மனை நிலமும், மேற்படி மனை நிலத்தில் கட்டியிருக்கும் ஆஸ்பெஸ்டாஸ் வீடு, கதவு, நிலவு, கட்டுக்கோப்பு காலியிடம் சகிதம். மேற்படி வீட்டிற்கு போடப்பட்டிருக்கும் மின்சார இணைப்பு, தண்ணீர் குழாய் இணைப்பு எண். 994, மின்சார இணைப்பு எண். 482, தண்ணீர் குழாய் இணைப்பு எண். 455, மேற்படி மனை நிலம் தற்கால சப்டிவிஷன்படி சர்வே எண். 127/1ல் கட்டுப்பட்டுள்ளது. மேற்படி சொத்தில் பொதுவில் ½ பங்கு இந்த அடமானப் பத்திரத்திற்கு கட்டுப்பட்டது. மதிப்பு ரூ. 3,00,000/–

2026ம் ஆண்டு ஜுலை திங்கள் 31–ம் நாள் என்னால் கையொப்பம் இடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையிட்டு வழங்கப்பட்டது.

K L PRIYANGA
Digitally signed by K L PRIYANGA

**முதன்மை சார்பு நீதிபதி,**
**கரூர்.**